**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – 2022-2023–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தொடக்க வகுப்பு பள்ளி மாணவர்களுக்கு 'ஊஞ்சல்' இதழ், உயர்வகுப்பு மாணவர்களுக்கு 'தேன்சிட்டு' இதழ் மற்றும் ஆசிரியர்களுக்கு 'கனவு ஆசிரியர்' மாத இதழ் வெளியிடுதல் – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித்[பக5(1)துறை**

அரசாணை (நிலை) எண்.108

நாள் 22.06.2022
(திருவள்ளுவராண்டு 2053,
சுப கிருது வருடம், ஆனி 8)

படிக்கப்பட்டது:-

பள்ளிக்கல்வி ஆணையரின் கடித எண்.19535/எம்/இ2/2022, நாள் 30.05.2022.

------

**ஆணை :-**

2022-2023–ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:-

22. "சிறார் பருவ இதழ் மற்றும் ஆசிரியர் மாத இதழ்":

"மாணவர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கவும் அவர்களின் உள்ளார்ந்த படைப்புத் திறன்களை வெளிப்படுத்தும் வகையிலும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு ஊஞ்சல் இதழும், உயர்வகுப்பு மாணவர்களுக்கு தேன்சிட்டு இதழும் மாதமிருமுறை வெளியிடப்படும். மேலும், ஆசிரியர்களுக்கான படைப்புத் தளத்தை உருவாக்கவும் சிறந்த கற்றல் கற்பித்தல் முறைகளைப் பரிமாறிக் கொள்ளவும் கனவு ஆசிரியர் என்ற மாதஇதழ் வெளியிடப்படும். சுமார் ரூ.7 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்".

2. மேலே படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி ஆணையரின் கடிதத்தில், மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு 'ஊஞ்சல்' இதழும், உயர் வகுப்பு மாணவர்களுக்கு 'தேன்சிட்டு' இதழும் மாதமிருமுறை வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் இந்த இதழ்களில் தேசிய, மாநில செய்திகள் மட்டுமன்றி அந்தந்த மாவட்டச் செய்திகளும் மாவட்டத்திலுள்ள மாணவர்களின் படைப்புகளும் இடம் பெறும் என்றும் இவ்விதழ்களை வகுப்பறைச் சூழலுடன் நயம்பட இணைத்து வாசிப்பை பேரியக்கமாக மாற்றும் வண்ணம் பள்ளி, வட்டார, மாவட்ட, மாநில அளவில் கதை, கட்டுரை, கவிதை, ஓவியம், பேச்சு உள்ளிட்ட பல்வேறு படைப்புத் திறன்களை வெளிக்கொணர போட்டிகளும் மாணவர்களை ஊக்குவிக்கப் பயிற்சிப் பட்டறைகளும் வல்லுநர்கள் மூலமாக நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார். இதுமட்டுமன்றி, மேற்காணும் அறிவிப்பின்படி ஆசிரியர்களுக்கென தனித்துவமான படைப்புத்தளத்தை உருவாக்கவும், சமகாலத்தில் உலகெங்கிலும் பயன்படுத்தப்படும்

சிறந்த கற்றல் கற்பித்தல் முறைகளைப் பரிமாறிக் கொள்ளவும், புதுமைகளையும் மாற்றுக் கல்வியியல் சிந்தனைகளையும் ஆசிரியர்களுக்கு அறிமுகம் செய்யவும், தமிழ்நாட்டிலும் தரணியெங்கிலும் உள்ள கனவு ஆசிரியர்கள் குறித்த செய்திகளை அனைவருக்கும் கொண்டு சேர்க்கவும், ஆசிரியர்களின் படைப்பாற்றலைப் போற்றிப் பாராட்டவும், அங்கீகரிக்கவும், ஆவணப்படுத்தவும், 'கனவு ஆசிரியர்' என்ற மாத இதழ் வெளியிடப்படும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், மேற்கூறிய சிறார் பருவ இதழ்கள் அனைத்து வகையான அரசுப் பள்ளிகளிலும் அனைத்து வகுப்பறைகளுக்கும் தலா ஒரு பிரதி வீதம் ஆண்டு விடுமுறை, பருவ விடுமுறை நீங்கலாக மாதமிருமுறை என ஒரு கல்வியாண்டிற்கு (ஊஞ்சல் மற்றும் தேன்சிட்டு) தலா 20 இதழ்களையும் ஆசிரியர்களுக்கான மாத இதழை ஒவ்வொரு பள்ளி நூலகத்திற்கும் ஒரு கல்வியாண்டிற்கு 10 இதழ்கள் என தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் வாயிலாக அச்சிட்டு நேரடியாக பள்ளிகளுக்கே சென்று சேரும் வண்ணம் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். மேலும், 2022-23ஆம் கல்வியாண்டில் இவ்விதழ்களை அச்சிட்டு வழங்கத் தேவையான நிதி குறித்த செலவின விவரத்தினை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

| வ.எண் | செலவினம் விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | அச்சுச் செலவினம் | 4,75,60,000.00 |
| 2 | ஆசிரியர் குழு | 1,02,83,592.00 |
| 3 | கணினிகள், கணினி உபகரணங்கள் மற்றும் பிற | 52,60,000.00 |
| 4 | ஆசிரியர்/மாணவர்களுக்கான பயிற்சிகள் | 49,29,042.00 |
| 5 | சில்லறைச் செலவினம் @5% of total cost | 35,00,000.00 |
| | மொத்தம் | 7,15,32,634.00 |

மேலும், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின் அறிவிப்பினை 2022-2023ஆம் கல்வியாண்டிலிருந்து தொடர்ந்து செயல்படுத்தவும், இவ்வாண்டிற்கு தேவைப்படும் நிதி ரூ.7,15,32,634/-ஐ தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழக நிதியிலிருந்து செலவிடவும், எதிர்வரும் ஆண்டுகளில் செலவினங்களில் ஏற்படும் மாற்றங்களையும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழக நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள உரிய அரசாணை வழங்குமாறு பள்ளிக் கல்வி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, "பள்ளி மாணவர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கவும் அவர்களின் உள்ளார்ந்த படைப்புத் திறன்களை வெளிப்படுத்தும் வகையிலும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தொடக்க வகுப்பு மாணவர்களுக்கு ஊஞ்சல் இதழ், உயர்வகுப்பு மாணவர்களுக்கு தேன்சிட்டு இதழ் மாதமிருமுறை வெளியிடும் திட்டத்திற்கும் மேலும், ஆசிரியர்களுக்கான படைப்புத் தளத்தை உருவாக்கவும் சிறந்த கற்றல் கற்பித்தல் முறைகளைப் பரிமாறிக் கொள்ளவும் கனவு ஆசிரியர் என்ற மாத இதழ் வெளியிடும் திட்டத்திற்கும்" அனுமதி அளித்தும் மற்றும்

2022-23ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்திட ஆகும் செலவினத் தொகை ரூ.7,15,32,634/- (ஏழு கோடியே பதினைந்து இலட்சத்து முப்பத்தியிராண்டாயிரத்து அறுநூற்று முப்பத்தி நான்கு மட்டும்)-ஐ தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழக நிதியிலிருந்து பெற்று செலவினம் மேற்கொள்ள அனுமதியளித்தும், மேலும், எதிர்வரும் கல்வியாண்டுகளில் இத்திட்டத்தினை செயல்படுத்திட ஆகும் செலவினங்களில் ஏற்படும் மாற்றங்களையும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழக நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

4.இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.28494/நிதி(கல்வி-II)த்துறை/2022, நாள் 14.06.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகம், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
நகல்
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதுநிலைத் தனிச்செயலர், சென்னை-9.
நிதி(கல்வி-II / வ,செ,பொது-I/II/வ.வ-I)த் துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வி (வ.செ.)த் துறை, சென்னை-9.
சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
23/06/2022